செ.வெ.எண்: 60 நாள்: 28.08.2019

**நாளேடுகளில் பிரசுரம் செய்ய வேண்டிய செய்தி**

நீலகிரி மாவட்டத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகள் பயன்பெறும் வகையில் வரும் 30.08.2019 வெள்ளிக்கிழமை அன்று காலை 10.00 மணி அளவில் பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில் (HADP – Resource Centre For Tribal Culture, Gardan Road,Ooty) மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் முகாம் நடைபெறவுள்ளது. இம்முகாமில் மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை பெறாதவர்கள், நவீன UDID பெறாதவர்களுக்கு மேற்படி அட்டை வழங்கப்படவுள்ளது. மேற்படி அடையாள அட்டை பெறாத மாற்றுத்திறனாளிகள் தங்களின் பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம் நான்கு(4), குடும்ப அட்டை அசல் மற்றும் நகல், ஆதார் அட்டை அசல் மற்றும் நகலுடன் இந்த சிறப்பு முகாமில் கலந்து கொண்டு பயன் பெறலாம். மேலும் மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டை பெற்றவர்கள் ஆதார் அட்டை, குடும்ப அட்டை போன்ற ஆவணங்களுடன் தங்களது கோரிக்கைகள் மற்றும் குறைகளை மனுக்களாக மாவட்ட ஆட்சியரிடம் சமர்ப்பித்து பயன் பெறலாம், மேலும் ஆதார் அட்டை, மாண்புமிகு முதலமைச்சரின் விரிவான காப்பீட்டு திட்ட அட்டை எடுக்காத மாற்றுத்திறனாளிகள் மேற்படி முகாமில் கலந்து கொண்டு பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் (பொ)
உதகமண்டலம். நீலகிரி மாவட்டம்.

நகல்: மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள்,
நீலகிரி மாவட்டம் - தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.